| |
|---|
| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai |
| Date: 04.06.2026 |
| CC No. 279/2025 |
| சாட்சி :PW1 |

| | |
|---|---|
| பெயர் : திரு. சூசை | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. ஆரோக்கியம் | தொழில் : விவசாயம் |
| கிராமம் : | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 52/2026 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**<u>முதல் விசாரணை (அரசு தரப்பில்)</u>**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பட்டியல் சாட்சி 1 ஜான்லாரன்ஸ்ஏ என்பவரை எனக்கு தெரியும். 02.03.2025 அன்று பகல் 12.00 மணியளவில் நான் எங்களது தோட்டத்தில் நெல் அடித்து நெல்லை வீட்டிற்கு எடுத்து சென்றுகொண்டிருந்தேன். நான் வீட்டிற்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது லாரன்ஸ் ஆஜர் எதிரிகள் இருவர் உள்ளிட்ட மூன்று பேரும் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார்கள். நான் அவர்களை காவல்நிலையத்திற்கு செல்லுங்கள், கோர்டுக்கு செல்லுங்கள் இங்கு வாக்குவாதம் செய்யாதீர்கள் என கூறி அனுப்பி வைத்தேன். நான் கடைசியாக சென்றதால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**
**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

2.தகராறு சாட்சி லாரன்ஸ் என்பவரின் தோட்டத்தில் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த இடத்தில் எதிரிகளுக்கு பங்கு இருப்பதாக சொல்கிறார்கள். ஆனால் சம்பவ இடத்தை லாரன்ஸ்தான் பயிர் செய்து வந்தார். லாரன்ஸ் பயிர்

செய்யும் இடத்திற்கு எதிரிகள் வந்து பிரச்சனை செய்தார்கள் என்றால் சரிதான். தகராறின் போது லாரன்ஸ் என்பவருக்கு முகம், உதடு, மூக்கு பகுதிகளில் காயங்கள் இருந்ததா என்றால் நான் கவனிக்கவில்லை. அவருக்கு முகம், உதடு உள்ளிட்ட பகுதிகளில் இரத்தம் வடிந்தது என்றால் நான் பார்க்கவில்லை. சம்பவத்தின் போது எதிரிகள் அசிங்கமாக வார்த்தைகளால் திட்டி வாக்குவாதத்தில் ஈடுபட்டார்கள் என்றால் நான் கேட்கவில்லை. எனக்கு செவித்திறன் குறைபாடு இல்லை. சம்பவத்தின் போது எதிரிகள் ஜான்லாரன்ஸை கையால் தாக்கினார்கள் என்றால் நான்பார்க்கவில்லை. எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது, வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார்கள் அது மட்டும் தான் தெரியும். அஜர் எதிரிகள் எனக்கு உறவினர்களா என்றால் இல்லை, பழக்கமானவர்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்த போது சம்பவத்தை நேரில் பார்த்தாக கூறினேன் என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில் 23.02.2025 அன்று பகல் 01.30 மணியளவில் எதிரிகள் இருவரும் லாரன்ஸை சம்பவ இடத்தில் வைத்து அசிங்கமாக வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும் கையால் தாக்கி இரத்த காயம் ஏற்படுத்தினார்கள் என்றும் 2ம் எதிரி செருப்பால் தாக்கினார்கள் என்றும் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும் கூறிவிட்டு தற்போது உண்மை தற்சமயம் எதிரிகள் பழக்கமானவர்கள் என்பதால் அவரை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** – இல்லை

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.